*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12012026.04

# Voices of Women's Emancipation: Bharathi and Bharathidasan

**Dr. R. Gandhimathi** *,
Assistant Professor, Department of Tamil, Mazharul Uloom College (Autonomous), Ambur, Tirupattur District.
*Correspondence: rgmathi1979@gmail.com. Tel: 9952777985.

**Article Info**
Received on 15-May2026, Revised on 16-May-2026, Accepted on 29-May-2026, Published on 01-June-2026

## ABSTRACT

When analyzing a literary work, it is essential to consider the historical and social context in which it was produced. The period in which Subramania Bharathi and Bharathidasan lived was one in which women were largely treated as subordinates both within the household and in society.

Bharathi, who initially wrote about national freedom, social liberation, and philosophical ideas rooted in Vedanta, developed a strong commitment to women's emancipation after his association with Sister Nivedita. Following Bharathi's ideological path, Bharathidasan also composed works advocating for women's liberation.

At a time when women were viewed as subjugated beings and objects of exploitation, both poets reimagined them as embodiments of life, vitality, and renewal. Historically, from the early phases of Tamil society often described as matrilineal up to the Sangam age, women were accorded high respect. However, during the medieval and later periods, this status declined, and women were increasingly subjected to oppression. Bharathi asserted that in a world where men and women are born equal, the subjugation of women is akin to blinding one eye. He emphasized that the intellectual advancement of women would lead to the progress of the entire world. Similarly, Bharathidasan criticized societal norms that denied women education and rights, echoing Bharathi's reformist vision.

Both poets vividly depicted the injustices faced by women and proposed pathways for their liberation. They advocated for women's education, the right to choose one's spouse, widow remarriage, and equal rights as essential foundations for a progressive society.

They firmly believed that women must be freed from the chains of oppression and injustice. Women, as vital contributors to the refinement and advancement of human life, deserve recognition and reverence. The poetic works of Bharathi and Bharathidasan played a significant role in inspiring social change and advancing the cause of women's rights.

***KEYWORDS:*** *Dynamics, Daytime Tryst Symbol / Day-sign, Night Tryst Symbol / Night-sign, Fictionalization / Myth-making, Generosity / Magnanimity..*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

# பெண்ணுரிமை போற்றும் பாரதியும் பாரதிதாசனும்

[1]**முனைவர். இரா. காந்திமதி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மஜ்ஹருல் உலூம் கல்லூரி(தன்னாட்சி), ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம்

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு படைப்பை நோக்கும்பொழுது அந்தப் படைப்பின் காலச் சூழலையும் நோக்க வேண்டும். பாரதி-பாரதிதாசன் இருவரும் வாழ்ந்த காலகட்டம் என்பது பெண்கள் வீட்டிலும் சமூகத்திலும் அடிமைகளாகக் கருதப்பட்ட காலகட்டமாகும்.

நாட்டு விடுதலை, சமூக விடுதலை, வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களைப் பாடிய பாரதிக்கு சகோதரி நிவேதிதாவின் அறிமுகதிற்குப் பிறகு பெண் விடுதலைக்காகப் போராட வேண்டும் எனும் சிந்தனை வந்தது.

பாரதியைத் தொடர்ந்து பாரதிதாசனும் பெண் விடுதலைக்காகப் பாடினான்.

அடிமைகளாகவும் போகப் பொருளாகவும் பார்க்கப்பட்ட பெண்களைப் பாரதியும் பாரதிதாசனும் வாழ்வாக வசந்தமாக பார்த்தனர்.

தாய்வழிச் சமூகம் என்று சொல்லப்படுகின்ற காலந்தொட்டு சங்க இலக்கியத் தொடக்கக் காலம்வரை பெண்கள் பெருமதிப்புடன் இருந்தனர். இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் இம்மதிப்புக் குறைந்து பெண்கள் அடிமைகள்போல் நடத்தப்பட்டனர்.

ஆணும் பெண்ணும் சமமாக பிறக்கின்ற இந்த மானுடத்தில் பெண்கள் இழிவுப்படுத்தப்பட்டு அடிமையாக்கப்படுவதென்பது இரு கண்களில் ஒன்றைக் குத்திக்கொள்வது போன்றது என்றும் பெண்களின் அறிவை வளர்த்தால் இவ்வையம் அறிவால் வளரும் என்றும் பாரதி அறிவுறுத்தினான். பெண்கள் கல்வியின்றி உரிமையின்றி இருக்கும் நிலையைப் பார்த்து பாரதியைப் போலவே பாரதிதாசனும் சமூகத்தைக் கண்டித்து அறிவுறுத்தகிறார்.

பெண்ணினத்திற்கான கொடுமைகளையும் அவற்றிலிருந்து விடுபடவேண்டிய வழிமுறைகளையும் இரு கவிஞர்களும் பாடுகின்றனர். பெண்களுக்குக் கல்வி, விருப்ப மணம், விதவை மறுமணம், சம உரிமை ஆகியவை வழங்கும்போதுதான் வளமான சமூகம் அமையும் என்கின்றனர்.

பெண் அடிமைத் தளையிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுபட வேண்டும். பெண் என்பவள் மானுட வாழ்வைச் செம்மையாக்க வந்தவள் எனவே பெண்கள் போற்றப்பட வேண்டியவள் என இருவருமே படுகின்றனர். பெண்ணுரிமைக்காக இவர்கள் பாடிய பாடல்கள் சமூகத்தில் பெரும் புரட்சியையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியது என்பது மிகையல்ல.

**முக்கியச் சொற்கள்:** இயங்கியல், பகல்குறி, இரவுக்குறி, புனைகாத்தல், வண்மை

**முன்னுரை**

இலக்கியம் என்பது சமூக இயங்கியல் பகுதிகளிலிருந்து படைப்பாளர்களால் படைக்கப்படுவது. அந்த படைப்புகள் சமூக வாழ்வியலில் உள்ள மானுட செயல்பாடுகளால் நிரம்பியிருக்கும். அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் செய்திகளை மட்டுமல்லாது அங்கு நேர்கிற கொடுமைகளையும் குறைகளையும் எடுத்துக்கூறி அவற்றை நிவர்த்தி செய்யும் வேலையையும் படைப்புகள் செய்யும். அதிலும் குறிப்பாக யாரோ ஒருவர் பாதிக்கப்படும்போது அவர்களுக்கான பாதிப்பை எதிர்த்து குரல் கொடுத்து அதை சரி செய்யும் வேலையை நல்ல படைப்புகள் செய்யும். அப்படியான படைப்புகளே காலங்களைத் தாண்டி சமூகத்தின் வரலாறாக நிற்கும்.

சமூகத்தின் ஆக்கத்திற்கும் அடிப்படை கட்டுமானத்திற்கும் பெரிதும் உதவிய பெண் சமூகத்தின் சமூக இருப்பு என்பது பல்வேறு காலங்களில் பல்வேறு வகையான முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் அடைந்துள்ளது. குறிப்பாக 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் பெண்களின் வாழ்வியல் களம் நிறைய அடக்குமுறைகளுக்கு ஆளானது. அதை மாற்றி அமைத்த பெரும்பங்கு பாரதி பாரதிதாசன் இருவரையும் சாரும். அவர்களின் பெண்ணியம் குறித்த பாடல்களை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**தமிழ்ச் சூழலில் பெண்கள்**

சங்ககால மகளிர் வீரமுடைய பெண்மணிகளாகவே இலக்கியங்களில் சித்திரிக்கப்பட்டனர். பகல்குறி, இரவுக்குறி, தலைவனைச் சந்தித்தல், புனைகாத்தல் என தனது எல்லைகளை மீறாதவளாக இருந்தாலும், புலியைப் புறமுதுகிட்டு ஓடச்செய்பவளாகவும், அரசனுக்கு பெண்பாற் தூதுவராகவும், புலமை வாய்ந்தவர்களாகவும் விளங்கினர். சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் பாடினும், பெண் வீரமுடையவளாகவும், விவேகமுடையவளாகவும் பல இடத்தில் சித்தரிக்கப்பட்டனர். அதற்குப் பிறகு தோன்றிய ஆணாதிக்க சமுதாயம் பெண்களை அடிமைப்படுத்தி வைத்து விட்டது. பெண் எப்படி இருக்க வேண்டும் வரையருக்கும் தொல்காப்பியம்.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல்காப்பியம், பொருளதிகாரம் 1045) என்றும்,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன"
(தொல்காப்பியம், பொருளதிகாரம் 1155)

என்றும் பெண்மையின் குணநலன்களை உரைக்கிறது. இத்தகைய பெண்களைப் பாடாத

புலவர்களும், படைப்பாளர்களும் இல்லை. படைப்புகளும் இல்லை எனலாம். கவிதையையும் கற்பனையையும் பிரிக்க முடியாதது போல, பெண்களையும் படைப்புகளையும் பிரிப்பதென்பது அரிது. பாராட்டுவதற்காகவோ, துணிச்சலுடனோ, வருணனைக்காகவோ, போராடுபவளாகவோ, பரிதாபத்திற்குரியவளாகவோ ஏதோ ஒரு விதத்தில் அந்தந்த படைப்பாளர் வாழும் சமுதாயச் சூழ்நிலைக்கேற்ப இலக்கியத்தில் பெண் கையாளப்படுகிறாள்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண் சமூகத்திற்கான உரிமைகளை நிலைநாட்டவும் கொடுமைகளை நீக்கவுமான உலகளாவிய கோட்பாடு ஆகும். அந்தந்த நிலவியல் சூழலுக்கு ஏற்ப இந்தக் கோட்பாடுகளைக் கொண்ட செயல்பாடுகள் வீரியம் பெற்றுள்ளன. "பெண்ணியத்தைக் குறிக்கும் feminism என்ற ஆங்கிலச்சொல் 'femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். 'femino' என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசியங்கள் என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்ணின் பாலியல் குணாதிசியங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்கு எடுத்தாளப்பட்டது". (இரா.பிரேமா,1994;1) என்றும் "பெண்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறை வடிவங்களையும் இனங்கண்டு, அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளைப் பற்றி அறிவு ரீதியாகச் சிந்தித்து செயல்படுவதும் ஆகும்" (2006;131) என இரா.பிரேமா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பெண்ணியம் செல்வாக்குப் பெற்றுள்ள நிலையில் பெண்ணின் உணர்வுகளைப் பெண்களாலேயே திறம்படப் படைக்க இயலும் என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தொடக்ககாலப் பெண்ணியவாதிகள் பலரும் ஆண்களாகவே இருந்துள்ள நிலையில் தற்போது பெண்களும் பெண்ணியப் படைப்பாளர்களும் இக்கருத்தில் வலிமையாக போராடி வருகின்றனர்.

பெண் உரிமைக்கான பெண்ணியப் போராட்டங்கள் செயல்பாட்டு வடிவமாக களத்தில் இறங்கி போராடுவதாக மட்டுமன்றி படைப்புகளின் வாயிலாகவும் படைக்கப்பட்டு வந்தன. பெண் உரிமைகளை வலியுறுத்தும் பல்வேறு படைப்புகள் சமூகத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன. அவை பல்வேறு மாற்றங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளன.

**பாரதி பாரதிதாசன்**

பாரதி மற்றும் பாரதிதாசன் பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகளில் ஈடுபடும் போது கவிஞர்களின் காலச் சூழலையும் படைப்புக்கான தேவைகளையும் ஒப்பிட்டு அறிவது அவசியமாகிறது. 19 ஆம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதை வரலாற்றில் இருவருமே ஈடு இணையற்ற கவிஞர்கள். நாட்டு விடுதலை, மொழிவளம், சமுதாய முன்னேற்றம், மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல்,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

பெண்ணுரிமை என இருவருமே சமூகதிற்குத் தேவையானக் கருத்துகளைத் தமது படைப்புகளில் வலியுறுத்தியவர்கள்.

பாரதியார் நாடு விடுதலைப் பெறுவதற்கு முன்னரே மறைந்துவிட்டார். பாவேந்தர் விடுதலை பெற்ற இந்தியாவில் இருபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தவர். விடுதலைக்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல், சமுதாய மாற்றங்களை நன்கு அறிந்தவர். புரட்சி புதுமை சமூதாயச் சூழலில் வாழ்ந்தவர்.

பாரதியார் வறுமையிலே வாழ்ந்து அன்றாடத் தேவைகளுக்காகக் கூடப் போராடியவர். ஆனால், பாவேந்தர் ஆசிரியப் பணி வாயிலாக வருவாய் ஈட்டி எளிமையாக வாழ்ந்தவர். பாரதிக்கு எந்த அரசியல் கட்சியும் வலுவான பின்புலத்தை அமைத்துத் தரவில்லை . ஆனால், பாரதிதாசனைத் தமிழக அரசியல் மறுமலர்ச்சி இயக்கங்கள் ஏற்றுக்கொண்டு அவருக்கு உறுதுணையாக நின்றன. தமது வாழ்நாளில் எவ்விதப் பெரிய வெகுமதி, பரிசு, பாராட்டு, பொருளுதவி என எதையும் பாரதியார் பெறவில்லை. ஆனால் பாரதிதாசனுக்கு அரசு சார்பாக பரிசுகள் பாராட்டுகள் வழங்கப்பட்டன.

பாரதியார் உலகம், மனிதப் பிறவி நிலையாமை என்பன குறித்த சில வேதாந்தக் கருத்துகளைப் தமது கவிதைகளின் வாயிலாக பேசியுள்ளார். பாரதியின் தாசனாக உள்ள பாவேந்தரின் பாடல்களில் இத்தகைய வேதாந்த, சித்தாந்தக் கருத்துகளை மிகுதியாகக் காண முடியாது. எனவே, பாரதியார்–பாரதிதாசன் ஆகியோருடைய படைப்புகளை ஒப்பு நோக்கும்போது மேற்கண்ட காலச்சூழல், பின்புலம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். (டாக்டர் சி,பாலசுபிரமணியன்,1992:12)

இத்தகைய சூழலில் நாட்டு விடுதலையோடு சமுக விடுதலைக்காகப் போராடிய பாரதிக்குச் சகோதரி நிவேதிதாவின் அறிமுகம் பெண் விடுதலைக்குப் போராட வேண்டும் எனும் சிந்தனையைத் தூண்டியது. அதன்பின் பாரதியின் பாடல்களில் பெண் விடுதலைக்கான முழக்கங்கள் அதிகமாகக் காணப்பட்டன. பாரதிதாசனோ சுயமரியாதை சிந்தனையுடன் ஏற்கனவே பாரதி பயணித்தப் பாதையில் பெண் விடுதலைக் குறித்துப் பாடினார்.

**இருகவிஞர்களும் பெண்ணியமும்**

பெண் அடிமையாகவும் போகப் பொருளாகவும் பார்க்கப்பட்ட அக் காலத்தில் பாரதியும் பாரதிதாசனும் பெண்ணை வாழ்வை வழங்கும் வசந்தமாகப் பார்த்தனர். எனக்கு மகிழ்ச்சியை வழங்கும் எல்லாமுமே பெண்தான் எனப் பாடுகிறார் பாரதி. அன்பும் அழகும் நிறைந்த சக உயிராகப் பார்த்தனர்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

"வீணையடி நீ யெனக்கு, மேவும் விரல் நானுனக்கு;
பூணும் வடம் நீ யெனக்கு, புது வயிரம் நானுனக்கு;
காணுமிடந்தோறு நின்றன் கண்ணி னொளி வீசுதடீ
மாணுடைய பேர ரசே! வாழ்வு நிலையே! கண்ணம்மா!"
(பாரதியார் கவிதைகள், கண்ணம்மா என் குழந்தை, 1-4)

கண்ணம்மா பாடல்களின் மூலம் பெண்ணை உயர்த்திய பாரதிக்குப் பெண் அடிமைப்பட்டு இருப்பதை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பாரதியிடம் இயல்பாகவே காணப்பட்ட சுதந்திர எண்ணம், அரசியல் மறுமலர்ச்சி, சமூகச் சீர்திருத்தம், பெண் விடுதலை பற்றிய அக்கறை யாவும் நிவேதிதாவைச் சந்தித்த பின் மேலும் தீவிரமடைந்து பாரதியைப் போராட வைத்தன. பெண்ணுக்குச் சமூக விடுதலை கிடைக்காமல் நாட்டிற்கு அரசியல் விடுதலை அடைவதில் பலன் இல்லை என்ற எண்ணத்தில் பல பாடல்களை இயற்றினார். பாரதிதாசனும் பெண்ணைப் .போற்றிப் பாராட்டினார். தனது பெண் குழந்தைத் தாலாட்டுப் பாடல்களில் பெண்களை வரமாகவும் பொக்கிசமாகவும் பாராட்டுகிறார்.

"அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியலே!
மின்னல் ஒளியே, விலைமதியா ரத்தினமே!
கன்னல் பிழிந்து கலந்த கனிச்சாறே!"
(பாரதிதாசன் கவிதைகள், பெண்குழந்தைத் தாலாட்டு)

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம் பெண்மையினால் உண்டென்று பேசவந்த பெண்ணழகே, நாய் என்று பெண்ணை நவில்வார்க்கு இப்புவிக்குத் தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே! என்றெல்லாம் பாராட்டித் திளைக்கிறார் பாவேந்தர்.

**பெண் அடிமை**

தாய் வழி சமூகம் என சொல்லப்படுகிற சங்க இலக்கியதின் தொடக்க கால சமூகம் தொடங்கி பாரத நாட்டில் பெண்களுக்குப் பெருமதிப்பு இருந்துள்ளதை பல்வேறு இலக்கியங்கள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்ணை 'வாழ்க்கைத் துணை' என்று காட்டினார் வள்ளுவர். ஔவையார் என்ற பெண்பாற் புலவர் தூதுவராகச் சென்றதைப் புறநானூறு காட்டுகிறது. பெண்களைச் சக்தியின் உருவமாகக் கருதியது பாரத நாடே. பெண்களுக்கு இருந்த

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

மதிப்பும் மரியாதையும் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் குறையலாயின. பெண்களுக்குக் கல்வி அறிவு தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டது. பெண்கள் அடிமைபோல் நடத்தப்பட்டனர். பெண்களுக்கு உரிய சமூக அந்தஸ்து (social status) மறுக்கப்பட்டது. பெண்ணடிமை பற்றிப் பாடும் பாரதி கொதிப்படைகிறார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்."

(பாரதியார் கவிதைகள், முரசு 33-36)

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் கெடுத்திடலாமோ? எனக் கேட்டு பெண்களின் அறிவை வளர்த்தால் இவ்வையம் பேதைமை இன்றி உயர்ந்திடும் என்று அறிவுரை கூறுகிறார்,

"நல்ல விலை கொண்டு நாயை விற்பார்,அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார்".

(பாரதியார் கவிதைகள், பெண்விடுதலைக் கும்மி, 13-17)

மானுட வாழ்வில் ஆண்களை உயர்த்திடும் பெண்களை இழிவு படுத்தும் ஆணினத்தைக் கண்டிகிறார்.

பாரதியாரை அடுத்துப் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் கொடுமைகளைப் பார்த்து அதைக் கண்டிக்கவும் சரி செய்யவும் பலப் பாடல்களைப் பாடுகின்றார். அவர் காலத்திய பெண்களின் நிலை குறித்துக் கவலைப்படும் பாரதிதாசன். பெண்களுக்கு பெர்னாட்ஷா சொல்லும் அறிவுரைகளை முன் வைக்கிறார்.

"கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்!
புல்லென்றே நினைக்கின்றீர் மனைவிமாரைப்
புருஷர்களின் உபயோகம் பெரிதென்கின்றீர்!
வல்லவன்பே ரறிஞன்ஷா வார்த்தைகேட்டீர்
மனோபாவம் இனியேனும் திருந்தவேண்டும்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

இல்லையெனில் எதுசெயலாம்! பெண்ஆண்என்ற

இரண்டுருளை யால்நடக்கும் இன்பவாழ்க்கை!"

(பாரதிதாசன் கவிதைகள், பெண்ணுலகு, 17 – 13)

நம் நாட்டுப் பெண்கள் கல்வியின்றி உரிமையின்றி பிழைக்கும் வழி தெரியாமல் விழிக்கின்றனர். ஆண்களே பெரியவர்கள் என்றும் பெண்கள் அவர்களுக்கு அடிமை என்றும் எண்ணும் ஆண்களை பழிக்கிறார். பேரறிஞன் பெர்னாட்ஷா வார்த்தை கேட்டு மனோபாவம் மாறி இனியேனும் திருந்தவேண்டும் என எச்சரிக்கிறார்.

**கைம்மைக் கொடுமை**

கணவன் இறந்த பிறகு பெண்கள் கைம்மை நோன்பு நோற்க வேண்டும் எனும் கொடுமை பெருங்கொடுமையாக இருந்தது. அதைப் போக்கிப் பெண்களைக் காக்க வேண்டும் என பல போராட்டங்கள் நடைபெற்றன. பாரதியும் பாவேந்தரும் அக்கொடுமை நீக்கப்பாடினர். பெண்ணுரிமைகள் சிலவற்றைக் குறிப்பிடும் பாரதி "கணவன் இறந்த பின்பு மறுவிவாகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்பதை வலியுறுத்தி கைம்மைக் கொடுமயைக் கண்டிக்கிறார். பாரதியைவிட பாவேந்தர் அக்கொடுமையை எதிர்த்துக் கடுமையாகப் பாடியுள்ளார். கைம்மைப் பழி, கைம்மைக் கொடுமை, மூடத்திருமணம் எனும் பாடல்கள் அக்காலக் கொடுமைகளையும் கவிஞரின் கோபத்தையும் காட்டுகின்றன.

"கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு

வேரிற் பழுத்த பலா - மிகக்

கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்

வடிக்கின்ற வட்ட நிலா!

சீரற் றிருக்குதையோ குளிர் தென்றல்

சிறந்திடும் பூஞ் சோலை - சீ

சீஎன் றிகழ்ந்திடப் பட்டதண்ணே நறுஞ்

சீதளப் பூ மாலை"

(பாரதிதாசன் கவிதைகள், கைம்மைப் பழி, 1-8)

பெண்ணின் கணவன் இறந்த பின் பெண்ணுக்கு கைம்மை என ஒரு பெருந்துன்பச் சுமைதனைத் தூக்கிவைத்து கணவனைவிட்டு பின்பு வேறு துணை தேடக்கூடாது என்கின்றனர். ஆனால் மனைவி இறந்த பின் ஆண்கள் வேறு மணம் புரிந்து கொள்கின்றனர். துணைவி இறந்தபின் வேறு துணைவியைத் தேடுமோர் ஆடவன்போல் பெண்ணும் துணைவன் இறந்தபின்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

வேறு துணைதேடச் சொல்ல வேண்டும் என வலியுறுத்துகிறார். கைம்மைக் கொடுமை எனும் மற்றொரு பாடலில் "இன்பம்வேண்டல் உயிரின் இயற்கை" அதை புரிந்து கொண்டு பெண்களைக் காக்கக் வேண்டும் என்கிறார்.

"கைம்மை எனக்கூறி - அப்பெரும்
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண்குலத்தின் - இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்.
செம்மை நிலையறியோம் - பெண்களின்
சிந்தையை வாட்டுகின்றோம்;
இம்மை இன்பம்வேண்டல் - உயிரின்
இயற்கை என்றறியோம்"
. (பாரதிதாசன் கவிதைகள், கைம்மைக் கொடுமை 1-8)

கையினிற் கூர்வேலால் நம்மினப் பெண்குலத்தின் இதய நடுவிற் பாய்ச்சுவதுபோல் நடந்து கொள்கிறோம். செம்மையான நிலை அறியாமல் இருக்கின்றோம் எனக் கூறி மனைவியின் உள்ளத்தை ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ, அடிமைப் பெண்கதியே நம் மாதர் நிலை என வருந்துகிறார். தொடர்ந்து பலக் கவிதைகள் இக்கொடுமை குறித்ததாகவே உள்ளத்தின் வாயிலாகப் பாவேந்தர் காலச் சூழலையும் பாவேந்தரின் எதிர் வினையையும் உணர முடிகின்றது.

**பெண் விடுதலை**

பெண் விடுதலைப் பெற வேண்டும் வீறுகொண்டு எழ வேண்டும் என விரும்பிய பாரதி உணர்ச்சிப் பொங்கப் பல பாடல்களைப் பாடினார். தன் மகளுக்காக எழுதிய பாப்பாப் பாடலில் பல அறிவுரைகளுக்கு இடையில்

'பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா
துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!'
(பாரதியார் கவிதைகள், பாப்பா பாட்டு, 15 -17)

பாதகஞ் செய்யும் மனிதர்களைக் கண்டால் பயங்கொள்ளக் கூடாது பாப்பா அவர்களை மோதி

மிதித்து அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு என பாப்பாக்களுக்குச் சொல்லி பெண் விடுதலைக்குச் சிறுவயதிலேயே அறிவுரை கூறுகிறார். பெரிய பெண்கள் மூடக்கட்டுக்குள் அகப்பட்டு வெளியே வர மறுக்கின்றனர். அதனால் பாப்பாக்களுக்குச் சொல்லி இருக்கலாம் எனவும் எடுத்து கொள்ள முடியும். அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட பெண்கள் கும்மி அடிப்பதான பாடலில்

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் அதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி

(பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக் கும்மி. 9 -13)

மாட்டை அடித்துத் தொழுவினில் கட்டும் வழக்கத்தைக் கொண்டு அதை வீட்டினில் உள்ள பெண்களாகிய எம்மிடங்காட்ட வந்தார், அதை தடுத்து அவர்களை வெட்டி விட்டோம் என்று கும்மியடி என பெண்ணினத்திற்கான கொடுமைகளையும் அதிலிருந்து விடுதலைப் பெற வேண்டிய வழி முறைகளையும் வலியுறுத்துகிறார்.

பெண் விடுதலை பெற வேண்டுமானால் அவள் விழிப்புணர்வு பெற வேண்டியது முதல் தேவை. விழிப்புணர்வு (awareness) என்பது கவனத்துடன் செயல்படுவதற்குரிய அறிவைக் குறிக்கும். அதனால் பெண்களிடம் அவர்களுடைய உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தார் பாரதியார். வங்காளப் பிரிவினைக்குப் பிறகு வங்கப் பெண்மணிகள் சுதேசிய இயக்கத்தில் மேற்கொண்ட முயற்சிகளைக் கண்டு வியப்புற்ற பாரதி தமிழ் நாட்டுப் பெண்களும் அவற்றையறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் ‘சக்கரவர்த்தினி’ பத்திரிகையில் சுதேசிய எண்ணங்களைப் பற்றிப் பெண்களுக்காக எழுதினார்.

அதே போல் பாரதிதாசன் அவர்களும் நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட பெண்கள் நிறைந்த நாடு வளர்ச்சி அடையும். அத்தகைய பெண்களை உருவாக்க வேண்டும் என்று எண்ணத்தோடு பல பாடல்களைப் பாடியுள்ளார். பெண்கள் நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபடுவதற்கு அவர்கள் அடிமைகள் இல்லை என்ற நிலை முதலில் உருவாக வேண்டும். எனவே,

”பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே”

(பாரதிதாசன் கவிதைகள், ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’)

என்று பாடியுள்ளார். முயலுக்குக் கொம்பு கிடையாது. இல்லாத கொம்பு எப்படி முயலுக்கு வளராதோ அதைப் போன்று பெண்ணுக்கு விடுதலை இல்லை என்றால் நாட்டுக்கும் விடுதலை

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 01 (June-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12012026*

கிடையாது என்று இந்திய விடுதலைக்கு முன்பே பாரதிதாசன் பாடியுள்ளார். பெண்களுக்கு விடுதலை பிறரிடமிருந்து வருவதில்லை. அவர்களிடமிருந்தே தோன்ற வேண்டும் என்ற உணர்வைப் பெண்களுக்கு ஊட்ட வேண்டும் என்று பாரதிதாசன் விரும்பினார்.

"ஆடை அணிகலன்கள் ஆசைக்கு வாசமலர்
தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்
கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி"
(பாரதிதாசன் கவிதைகள், 'வீரத்தாய்' காட்சி : 1)

எனும் பாடலில் ஆடை, அணிகலன் முதலியவற்றில் மட்டும் ஆர்வம் காட்டும் பெண்களை வலிமையற்றவர்கள் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் அந்த மன நிலையிலிருந்து வெளிவர வேண்டும். அப்போதுதான் பெண் விடுதலை சாத்தியமாகும் என வலியுறுத்துகிறார். மேலும் பெண் பூரண விடுதலை பெற பெண் கல்வி அவசியம் என்பதை உணர்ந்து அதற்கான வழிகளைக் காட்டுகின்றனர்.

**பெண் கல்வி**

மக்கள் தொகையில் பாதியாக விளங்கும் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லையென்றால் சமூகம் மேம்பட முடியாது என்றுணர்ந்த அக்காலச் சான்றோர்கள் பெண் கல்வியை வற்புறுத்தினர். அவ்வகையில் பெண்கள் முன்னேற வேண்டுமென்றால் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும் என பாரதியும் பாரதிதாசனும் தமது படைப்புகளின் வழியே வலியுறுத்தினர். 'பெண் விடுதலைக் கும்மி' பாடும் பாரதி எங்களின் கல்வியைத் தடுத்தவர்கள் இறந்து விட்டனர். எம்மை வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்று சொன்ன விந்தை மனிதர்கள் தலை கவிழ்ந்தனர் என்று பெண்கள் சொல்வதாகப் பாடுகிறார்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.!"
(பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக் கும்மி, 9 -13)

எனக் கூறி பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இளைத்தவள் இல்லை என்று கும்மியடி என்று இப்படி நடக்க

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12012026*

வேண்டும் என வலியுறுத்துவதாகவும் கொள்ளலாம். பெண் என்பவள் சாதம் படைக்க வந்தவள் அல்ல. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தவள். அவள் அது மட்டுமின்றி தெய்வச் சாதியான மனிதர்களையும் படைப்பவள் எனக் கவிதையைத் தொடர்கிறாள் பாரதியின் புதுமைப் பெண்.

பெண்கள் கல்வி கற்று உயர வேண்டும். கல்வி கற்ற பெண்களால்தான் சிறந்த சமுதாயத்தை உருவாக்க இயலும் என்னும் எண்ணம் கொண்டவர் பாரதிதாசன். எனவே, அவர் பெண்கல்வியின் உயர்வைக் குடும்ப விளக்கில் தெரிவித்துள்ளார்.

பெண்கட்குக் கல்வி வேண்டும் குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும் கல்வியைப் பேணுதற்கே!

(பாரதிதாசன் கவிதைகள், குடும்பவிளக்கு 'விருந்தோம்பல்')

என்னும் அடிகளில் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு மட்டும் அல்லாமல் உலகத்தைப் பாதுகாப்பதற்கும் பெண்கல்வி தேவை என்று பாரதிதாசன் தெரிவித்துள்ளார். கல்வி இல்லாத பெண்களால் சமுதாயத்தில் அறியாமைதான் நிறையும் என்னும் கருத்தைப் பாரதிதாசன் பின்வரும் பாடல் வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

கல்வியில் லாத பெண்கள் களர் நிலம்; அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி; அங்கே
நல்லறிவுடைய மக்கள் விளைவது நவிலவோ நான்?

(பாரதிதாசன் கவிதைகள், குடும்ப விளக்கு 'விருந்தோம்பல்')

என்னும் அடிகளில் கல்வி அறிவுடைய பெண்களால்தான் அறிவுடைய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும் பாரதிதாசன் தெரிவித்துள்ளார்.

**பெண்ணுரிமை**

சமுதாயத்தில் உள்ள பழக்க வழக்கங்களால் பெண்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. அந்த உரிமைகளை வழங்கினால் பெண்கள் விடுதலை அடைவது திண்ணம் என்று நம்பிய பாரதியும் பாவேந்தரும் ஆண் பெண் சமத்துவம் உள்ளிட்ட பல உரிமைகளை முன் வைத்தனர். பெண் என்பவள் உலகைக் காக்கும் சக்தியின் வடிவம் என்று சொன்ன பாரதி

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்"

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

ஆணும் பெண்ணும் சமம் எனும் நிலை வந்தால்தான் உலகம் அறிவு பெற்று நலம் பெறும். கற்பு எனப்படுவதும் இருவருக்கும் ஒரே தன்மையது. கற்பைக் காரணம் காட்டிப் பெண்ணைத் துன்புறுத்துவது தவறு என்றும் சாடுகிறார். பெண்கள் விடுதலை பெற் பெண்களுக்குரிய உரிமைகளாக சிலவற்றைக் கூறுகிறார்.

- பெண் வயதுக்கு வருமுன்பு திருமணம் செய்து கொடுக்கக் கூடாது.
- அவர்களுக்கு விருப்பமில்லாத ஒருவனை மணம் செய்து கொள்ள வற்புறுத்தக் கூடாது.
- பெண் குழந்தைகளுக்குச் சொத்தில் சமபாகம் கொடுக்க வேண்டும்.
- கணவன் இறந்த பின்பு மறுவிவாகம் செய்ய அனுமதிக்க வேண்டும்.
- விவாகம் செய்யாமல் கைத்தொழில் முதலியன செய்து கௌரவமாக வாழ விரும்பும் பெண்களை அங்ஙனம் வாழ இடம் கொடுக்க வேண்டும்.
- பெண்கள் கணவனைப் பிரிந்து வாழ விரும்பினால் அதற்கு இடமளிக்க வேண்டும். அவளை அவமானப் படுத்தக்கூடாது.
- பெண்களுக்கு உயர்தரக் கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும்.

என்பனவாகும். இவ்வுரிமைகள் பெற்றால் சமுதாயம் முன்னேறும். இவ்வுரிமைகளையும் விரைந்து அளிக்க வேண்டும் என்கிறார். (பாரதியும் சமூகமும், பக்: 133)

பெண்கள் அறிவும் வீரமும் துணிச்சலும் கொண்டவர்களாய் விளங்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் நாடு நன்மை பெறும். எனவே பாரதிதாசன் அறிவும் வீரமும் கொண்ட வீரத்தாயாக விஜயா என்னும் பெண்ணை 'வீரத்தாய்' என்னும் காவியத்தில் படைத்துள்ளார். அவளது அறிவுக் கூர்மையாலும் வீரத்தாலும் அவள் தனது மகனையும் நாட்டையும் காத்தாள். அவள் தன் மகனிடம் கூறும்போது,

"நிற்கையில் நீ நிமிர்ந்து நிற்பாய் குன்றத்தைப் போல்!"

(பாரதிதாசன் கவிதைகள், 'வீரத்தாய்' காட்சி : 3)

என்று கூறி அவனுக்கு வீரத்தைக் கொடுத்தாள். அவளது ஆற்றலை அவளுடைய மகன் சுதர்மன் வாய்மொழியாகவே பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளார் பாருங்கள். கிழவர் வேடத்தில் தனது மகன் சுதர்மனுக்குப் போர்ப்பயிற்சி கொடுத்த விஜயாவிடம் சுதர்மன் சொல்கிறான்.

"கற்போர்கள் வியக்கும்வகை இந்நாள் மட்டும்

கதியற்றுக் கிடந்திட்ட அடியேனுக்கு
மற்போரும் விற்போரும் வாளின்போரும்
வளர் கலைகள் பலப்பலவும் சொல்லித்தந்தீர்"

(பாரதிதாசன் கவிதைகள், 'வீரத்தாய்' காட்சி : 3)

என்னும் வரிகளின் வாயிலாக மேற்கூறிய போர்க்கலைகள் அனைத்தையும் விஜயா அறிந்திருந்ததைப் பாரதிதாசன் தெரிவித்துள்ளார். 'தமிழச்சியின் கத்தி' என்னும் காவியத்தில் பாரதிதாசன் வேறு ஒரு வீரப்பெண்ணைப் படைத்துள்ளார். அவள் பெயர் சுப்பம்மாள். தேசிங்கு மன்னனின் படைத்தலைவர்களில் ஒருவனான சுதரிசன் என்பவன் அவளிடம் தவறாக நடக்க முயன்றான். அதைத் தடுத்த சுப்பம்மா கூறியதைக் கேளுங்கள்.

"தீ என்னை வாட்டிடினும்
கையைத் தொடாதேயடா - இந்த
முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை காண்"

(பாரதிதாசன் கவிதைகள், தமிழச்சியின் கத்தி - 20)

என்று சீறினாள். உயிரைவிட மானம்தான் பெரிது என்று கருதும் வீரமும் மானமும் கொண்ட பெண்ணாக இங்கே சுப்பம்மாளை நாம் காண்கிறோம். பெண்களுக்கு உரிமை வழங்கும் போதுதான் வளமான சமூகம் அமையும் அதற்கு பெண் அடிமைத் தளைகளிலிருந்து விடுபடவேண்டும். கொடுமைகளை எதிர்க்கும் வீரம் பெறவேண்டும் என்பதாகவே இரு கவிஞர்களின் படைப்புகளுமே இருந்துள்ளன,

**முடிவுரை**

சமூக இயக்கத்தில் ஆணும் பெண்ணும் சமம். அவ்வாறு சமமின்மை நிலவி பெண் சமூகம் அடிமை படுத்தப்படும் போது அந்த சமூகம் வளர்ச்சி அடையாது என்பதை உணர்ந்த பாரதியும் பாரதிதாசனும் பெண் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான பல்வேறு படைப்புகளைத் தந்துள்ளனர்.

இருவரின் காலகட்டங்களும் வேறுவேறு என்றாலும் அவர்களின் பாடுபொருள் என்பது பெண்களை முன்னேற்ற வேண்டும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் தவிர்க்கப்பட வேண்டும் பெண்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்பதாகவே இருந்துள்ளது.

பெண்ணியம் பற்றிய பாரதியின் படைப்புகள் முன்னத்தி ஏராகவும் பாரதியின் வழியில் அந்த பாடு பொருளோடு பெண் சமூக முன்னேற்றத்திற்கு பாடியவராக பாரதிதாசனும் விளங்குகின்றனர். ஏற்கனவே சென்ற பாதையில் பயணித்தவர் என்பதாலும் முழுக்க முழுக்க சமூக

விடுதலையை பற்றி அவர் படைப்புகளை தந்தவர் என்பதாலும் பெண் விடுதலை பற்றிய கூடுதலான பல்வேறு படைப்புகளைத் தருவதற்கான வாய்ப்பு பாரதிதாசனுக்கு இருந்துள்ளது எனக் கருதலாம்.

பெண் என்பவள் மானுட வாழ்வை செம்மையாக்க வந்தவள். ஆணுக்கு உதவிகள் செய்து மனித வாழ்வு சிறப்பாக்கப் பாடுபடுபவள். அவள் மிகச்சிறந்த இடத்தில் வைத்துப் போற்ற பட வேண்டியவள் எனும் கருத்தை இரு கவிஞர்களும் வலியுறுத்துகின்றனர்.

சமூகத்தில் ஆங்காங்கே நிலவிய பெண் அடிமைத்தனத்தையும் பெண்ணுக்கு எதிரான கொடுமைகளையும் கண்டிக்கும் அவர்கள் பெண்கள் விடுதலை பெற வேண்டுமானால் கல்வி அறிவு அவசியம் என முடிவிற்கு வந்து பெண்கல்வியை வலியுறுத்துகின்றனர். அவர்களின் பாடல்களும் சித்தாந்தங்களும் பெண்களிடையே பெரும் முன்னேற்றத்தை உண்டாக்கி அச்சமூகத்தை மேம்படுத்தியது என்றால் மிகையாகாது.

குழந்தை மணம், கைம்மை கொடுமை, பாலின வேறுபாடு போன்றவற்றில் இருந்து பெண்களைக் காக்க பாடல்களை படைத்த அதே நேரத்தில் புரட்சிகரமான பெண் சமூகத்தை உருவாக்கி, சமூகத்தின் கொடுமைகளுக்குப் பெண்கள் போராட வேண்டி வலியுறுத்தியும் பல்வேறு படைப்புகளை தந்துள்ளனர் அத்தகைய படைப்புகள் சமூகத்தில் பெரிய மாற்றங்களையும் விதைத்துள்ளன.

**பயன்பட்ட நூல்கள்**

[1.] பாரதியார், பாரதியார் கவிதைகள், 2000, மணிவாசகர் பதிப்பகம், சென்னை
[2.] பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், 2000, மணிவாசகர் பதிப்பகம், சென்னை
[3.] டாக்டர் சி. பாலசுபிரமணியன், பாரதியும் பாரதிதாசனும், 1992, நறுமலர் பதிப்பகம், சென்னை.
[4.] டாக்டர் நல்லி குப்புசாமி ரெட்டி, மகாகவி பாரதி சில ஒப்பீட்டுப் பார்வைகள், 2006, ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை
[5.] கு.வெ. பாலசுப்ரமனியன், பாரதி வாழ்கிறார், 2017, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
[6.] இரா. பிரேமா, 1994. பெண்ணியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 13.
[7.] இரா. பிரேமா, 2006, பெண்-மரபிலும் இலக்கியத்திலும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை
[8.] இளம்பூணர், 2006, தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணருரை, சாரதா பதிப்பகம், சென்னை.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work